DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 29/2023**

**Deposition of LW1 examined as PW1** Dt. 10.06.2025

| | |
|---|---|
| Name | சிவபிரகாசம் |
| Father's/Husband's Name | ராமசாமி |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | |
| Age | 48/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.06.2025

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வெளிமாநிலத்தில் கட்டுமானத்தொழில் செய்து வருகிறேன். கடந்த 22.07.2022 ம் தேதி காலை 10.30 மணியளவில் ஜேசிபி இயந்திரம் மூலம் எனது வீட்டு கொள்ளை புறத்தை சுத்தப்படுத்துவதற்காக எனது சித்தப்பா மகன் ரஜினி வீட்டு இடத்தின் வழியாக ஜேசிபி இயந்திரத்தை எடுத்து சென்ற போது எனது வீட்டு வாசலில் வைத்து எதிரி ராமலிங்கம் மற்றும் எதிரி ரஞ்சிதா ஆகியோர் கட்டை கழியை எடுத்து வந்து என்னை குச்சிக்காரி மகனே தேவிடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் திட்டி ஊரார் முன்னிலையில் தலைகுனியவைக்கும்படி திட்டி ராமலிங்கம் என்னை கட்டையால் நெஞ்சில் குத்தினார், வலது பக்க கன்னத்தில் கையால் குத்தினார் கட்டையை காட்டி உன்னை கொல்லமால் விடமாட்டேன் என்று மிரட்டினார். சத்தம் கேட்டு வந்த எனது அம்மாவை எதிரி ரஞ்சிதா தலை முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி அடித்தார். பிறகு எதிரிகள் இருவரும் என்னை தீர்த்துகட்டிவிடுவதாக மிரட்டிவிட்டு சம்பவ இடத்தை விட்டு சென்றுவிட்டனர். உடனே பாகசாலை காவல் நிலையம் சென்று எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை நான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். உங்களது வீடு எந்த திசையில் பாரத்துள்ளது என்றால் தெற்குபுற வாசல் கொண்ட வீடு. எங்களது வீதி கிழக்கு மேற்கு வீதி ஆகும். எதிரிகளை தெரியுமா என்றால் தெரியும். எதிரிகளின் வீடு கிழக்கு பார்த்த வீடு என்றால் சரிதான். அவர்களது தெரு வடக்கு தெற்காக அமைந்துள்ளது என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டிற்கு அருகில் யார் வீடு என்றால் வேலுசாமி வீடு உள்ளது. எதிரிகளது வீட்டு கொல்லம் எல் வடிவ கிழக்கு மேற்கு திசையில் வந்து எங்களது வீட்டு கொல்லைக்கும்

10.6.25

கணேசன் வீட்டு கொல்லைக்கும் அருகில் வந்து முடியும் என்றால் சரிதான். எங்கள் வீட்டு கொல்லைக்கு பின்புறம் எதிரிகளின் கொல்லை கிழக்கு மேற்கு திசையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டு கொல்லைக்கு அருகில் வாய்க்காலும் அதை ஒட்டியே சாலையும் உள்ளது என்றால் சரிதான். ஜேசிபி இயந்திரத்தை சட்டத்திற்கு புறம்பாக எதிரியின் நிலத்தில் கொண்டு சென்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் எடுத்து சென்றது மட்டும் இல்லாமல் எதிரி நிலத்தின் பொழி (எல்லை) சேதப்படுத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஜேசிபி இயந்திரத்தை உங்கள் வீட்டு வாய்க்காலின் வழியாக கொண்டு செல்ல முடியும் என்றால் முடியும். அந்த பகுதியில் வேலி வைத்திருந்தேன். அதனால் அந்த வழியாக ஜேசிபி இயந்திரத்தை கொண்டு செல்லவில்லை. நான் வைத்த வேலியை பிரித்து சேதப்படுத்த கூடாது என்பதால் ராமலிங்கம் நிலத்தின் வழியாக ஜேசிபி இயந்திரத்தை கொண்டு சென்றேன் என்றால் சரியல்ல. ராமலிங்கம் நிலத்தின் வழியாக ஜேசிபி இயந்திரத்தை கொண்டு சென்று அவருடைய வேலியை சேதப்படுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கால கட்டத்தில் எதிரி ரஞ்சிதா எந்த உடல்நிலையில் இருந்தார் என்று தெரிந்து கொண்டீரா என்றால் இல்லை. தலை பிரசவத்திற்கு வீட்டிற்கு அழைத்து வந்து குழந்தை பிறந்து 20 நாட்கள் மட்டுமே ஆகியிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கட்டையால் குத்திய விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் இல்லை. இந்த விபரத்தை எந்த கால கட்டத்திலும் சொல்லவில்லை வழக்கிற்காக நீதிமன்றத்தில் முதல்முறையாக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் உங்களை தாக்கி இருந்தால் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து இருப்பீர்கள் என்றும் அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்காததால் தான் மருத்துவமனைக்கு செல்லாமல் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொண்டேன். உலகநாதன் என்பவர் எனது அத்தை மகன் ஆவார். அவர் புத்தூரை சேர்ந்தவர். ஆண்டவர் குரு எனது சித்தப்பா மகன் ஆவார். அவர் செம்பதனிருப்பை சேர்ந்தவர். எதிரிகள் தாக்கிய போது மேற்படி இருவரும் தான் விலக்கிவிட்டார்கள். மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் இல்லை. புத்தூருக்கும் எங்களது ஊருக்கும் எத்தனை கீலோ மீட்டர் இருக்கும் என்றால் 10 கீலோ மீட்டர் இருக்கும். திட்டம் போட்டு எதிரிகளிடம் பிரச்சனை செய்வதற்காக நானும் உலகநாதன், ஆண்டவர் குரு ஆகியோர் ஒன்றுகூடி எதிரிகளிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. ஆண்டவர் குரு, சாராதாம்பாள், என் மனைவி ஹேமலதா ஆகியோர் சென்று எதிரிகளை தாக்கி உள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஜேசிபி இயந்திரத்தை எதிரிகளின் கொல்லையில் இயக்கியதை 2 வது எதிரி கேமிராவில் பதிவு செய்த போது நானும் என்னுடன் சேர்ந்தவர்களும் 2 வது எதிரியை தாக்கியதாகவும் தடுக்க வந்த 1 வது எதிரியை தாக்கியதாகவும் அதில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யான புகார் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்களது அம்மாவை எந்த காலத்திலும் எதிரிகள் தாக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த சமயத்திலும் என்னை கொச்சை வார்த்தைகளில் கூறி திட்டவில்லை என்றாலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இதனால் யாருக்கும் மனஉளைச்சல் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் முன்னேற்றத்திற்காக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு எதிரியின்
முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு
அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

10-6-25

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை